# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 139/ந/2018

நாள் : 06/2/2019

திரு மூ. ஈஸ்வரன்,
திருத்தங்கல். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருத்தங்கல் நகராட்சி,
திருத்தங்கல். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் நகராட்சி, வையன் வீதி, 11–A கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு மூ. ஈஸ்வரன் அவர்களின் 18.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 139/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் நகராட்சி, வையன் வீதி, 11–A கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு மூ. ஈஸ்வரன் என்பவர் திருத்தங்கல் நகராட்சியில் 01.01.2016 முதல் 01.01.2018 வரையிலான காலக்கட்டத்தில் பதிவறை எழுத்தர், வரி வசூலிப்பவர் முதலான சுமார் 6 காலிப் பணியிடங்கள் சட்டத்திற்குப் புறம்பாக, நகராட்சி விதிகளுக்குட்படுத்தப்படாமல் நிரப்பப் பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். மேலும், விருதுநகர் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வாயிலாக எந்தவிதமான பதிவு மூப்பு வேண்டி செய்தித்தாள் விளம்பரம் செய்யாமலும், நகராட்சி ஆணையாளருக்கு வேண்டப்பட்ட மற்றும் திருத்தங்கல் நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் போன்றோரின் உறவினர்களுக்கும் அதிகார துஷ்பிரயோகம் வாயிலாகப் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளன என்பதை தான் அறிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 03.09.2018 அன்று முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொண்ட பொழுது மேற்குறிப்பிட்ட விவரங்களை உறுதி செய்ததுடன், விதிகளைப் பின்பற்றாமல் நிரப்பப்பட்ட பணியிடங்கள் குறித்த ஆணையாளரின் ஆணையை இரத்து செய்தும், அவர் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

2. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து 05.7.2018 நாளிட்ட தனது கடிதத்தில், மேற்குறிப்பிட்ட பணியிடங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் முன்னர் வேலைவாய்ப்பு பதிவின் அடிப்படையிலும் அனைவரும் விண்ணப்பிக்கும் வகையில் அதற்கான விளம்பரம், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், விருது நகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டும் மேற்படி பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று நகராட்சி ஆணையர் (பொறுப்பு) தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி ஆணையர் பொறுப்பில் இருந்த பொறியாளர் திரு எஸ். முகமது சாகுல் ஹமீது அவர்களிடம் 03.12.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. காலிப் பணியிடங்களில் நபர்களை பணியமர்வு செய்வதற்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் செய்தித்தாள் விளம்பரம் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த விவரங்களைக் குறிப்பிட்டதுடன் அதற்கான ஆவணங்களை தனது 05.07.2018 நாளிட்ட கடிதத்துடன் சமர்ப்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும், நியமனம் செய்யப்படும் பதவிகளில் ஏதாவது ஒரு பதவி தனக்கு ஒதுக்க வேண்டும் என்று முறையீட்டு மனுதாரர் தன்னிடம் கோரியதாகவும், தான் சொல்லும் நபருக்கு பணி நியமனம் வழங்கினால் மனுவை விலக்கிக் கொள்வதாகவும் கூறினார் என்று விசாரணையின் போது ஆணையர் தெரிவித்தார். அது சமயம் நகராட்சியில் பணிபுரியும் பணி மேற்பார்வையாளர் திரு எம்.டி. பாலகிருஷ்ணன் மற்றும் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு கணேஷ் ஆகிய இருவரும் உடன் இருந்தனர் என்றும் தெரிவித்தார். எதிர்காலத்தில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் தங்களுக்குத் தருவதாக எழுதித் தருமாறும் கேட்டார்கள் என்றும் தெரிவித்தார். காலியாக இருந்த பணியிடங்களில் முறையீட்டு மனுதாரர் சொல்லும் நபருக்கு பணி நியமனம் வழங்காததால் இதுபோன்று ஆதாரமற்ற புகார் மனுவினைத் தாக்கல் செய்துள்ளதாகவும் ஆணையர் தெரிவித்தார்.

4. திருத்தங்கல் நகராட்சியில் பணி மேற்பார்வையாளராகப் பணிபுரியும் திரு எம்.டி. பாலகிருஷ்ணன் அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. நகராட்சியில் தனது செயல்பாடு குறித்து விரிவான விளக்கத்தினை அளித்தார். நகராட்சி பொறியாளர் திரு எஸ். முகமது சாகுல் ஹமீது ஆணையாளர் பொறுப்பினை வகித்த பொழுது ஐந்தாறு நபர்களுக்கு பணி ஆணைகள் வழங்கினார் என்றும், அப்பணிகள் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து அதன் மூலம் விண்ணப்பித்த நபர்கள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் குறிப்பிட்ட நபர்களிடம் நேர்முக தேர்வு நடத்தி பணி நியமனம் செய்யப்பட்டன என்று தெரிவித்தார். மேலும், ஆணையருக்கு வேண்டியவர்கள் நியமனம் செய்யப்பட்டனரா என்ற விவரம் தனக்குத் தெரியாது என்றும் வேலை விஷயமாக திரு கணேசன் அவர்களை அழைத்துச் சென்று ஆணையரைச் சந்திக்கவில்லை என்றும் தெரிவித்தார். எனினும், பணி நியமனம் குறித்து திரு மூ.ஈஸ்வரன் புகார் செய்தது தனக்குத் தெரியும் என்றும் குறிப்பிட்டார்.

5. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர், நகராட்சி ஆணையர் மற்றும் பணி மேற்பார்வையாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் நன்கு ஆய்வு செய்யப்பட்டன. திருத்தங்கல் நகராட்சியில் வருவாய் உதவியாளர், பதிவறை எழுத்தர், காவலர், துப்புரவுப் பணியாளர் மற்றும் GLR ஆப்பரேட்டர் ஆகிய பணியிடங்களுக்கான நியமனங்கள், 2017–ஆம் ஆண்டில் செய்தித்தாள்கள் விளம்பரம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தோர் பட்டியல் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மேற்படி பதவிகளுக்கான நியமனங்களுக்கு மன்ற ஒப்புதல்களும் பெறப்பட்டுள்ளன. நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் சமூக ஆர்வலர் மற்றும் தகவல் ஆர்வலருமான முறையீட்டு மனுதாரரின் குற்றச்

சாட்டுகளை உறுதி செய்வதற்கு ஆதாரங்கள் எதுவும் கண்டறிய இயலவில்லை. திருத்தங்கல் நகராட்சியில் அடுத்த முறை பணி நியமனம் செய்யும் பொழுது தான் சொல்லும் நபருக்கு பணி நியமனம் வழங்கினால் இந்நேர்வு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டு மனுவை விலக்கிக் கொள்வதாக மனுதாரர் தெரிவித்தார் என்ற எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் கூற்றையும் இம்முறைமன்ற நடுவம் கவனத்தில் கொண்டது. நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறும் ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளைக் களைவதற்காக ஏற்படுத்தப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தில் குற்றச்சாட்டுகள் அடங்கிய முறையீட்டு மனுக்களை உரிய ஆதார ஆவணங்கள் மற்றும் சாட்சிகளைக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்படவேண்டுமேயன்றி ஒரு பலனை எதிர்பார்த்து எந்தவொரு முறையீட்டு மனுவையும் தாக்கல் செய்யலாகாது என இந்நேர்வில் பதிவு செய்து இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019**– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், **6**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு மூ. ஈஸ்வரன்,**
   **11–ஏ, வையன் வீதி,**
   **இரயில்வேகேட் சமீபம்,**
   **சிவகாசி – 626 130**
   **விருது நகர் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **திருத்தங்கல் நகராட்சி,**
   **திருத்தங்கல்.**

3. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **சேப்பாக்கம்,**
   **சென்னை – 600 005.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**